பாடம் 1

# யாக்கோபின் பயணம்

*நீ யாரிடமும் எந்த உதவியும் கேட்காமலிருந்து குடும்பத்தில் உள்ளவர்கள் உனக்கு உதவிசெய்யும்போது உனக்கு எப்படியிருக்கும்? அவர்கள் அப்படி உனக்குச் செய்த உதவிகள் யாவை? வீட்டில் யாவரிடமும் அவ்வாறு அன்புடன் நடந்துகொள்வது எவ்வளவு முக்கியம் என்று இன்றைய கதையில் பார்ப்போமா?*

யாக்கோபு தன் அம்மாவின் அண்ணனாகிய லாபான் என்னும் மாமாவின் வீட்டிற்குப் போய்க்கொண்டிருந்தார். மாமா வீட்டிற்குப் போய்ச்சேர, 450 மைல்கள் பயணம்செய்ய வேண்டியதிருந்தது. தன் பயணத்தின்போது இரவில், தான் கண்ட கனவு யாக்கோபின் நினைவிற்கு வந்தது. ஏணியில் தேவதூதர்கள் ஏறுகிறவர்களும் இறங்குகிறவர்களுமாய் இருந்ததை நினைத்துப் பார்த்தார்.

ஏணியின் மேலாக நின்ற இயேசு தன்னிடம் பேசியதையும் நினைத்துப்பார்த்தார். மூன்று வாரங்களாகப் பயணம் செய்து மாமாவின் ஊராகிய ஆரானுக்கு வந்து சேர்ந்தார்.

அங்கே ஒரு கிணறு இருந்தது. அப்போது மதியவேளை. மூன்று ஆட்டுமந்தைகள் அங்கே மடக்கியிருந்தன. கிணற்றின் வாய் பெரிய கல்லினால் அடைக்கப்பட்டிருந்தது. ஆனால், யாக்கோபின் ஊரில் இப்படி இருக்காது. எனவே, அவர் ஆச்சரியத்துடன், அங்கிருந்தவர்களிடம் பேச ஆரம்பித்தார்.



“உங்களுக்கு எந்த ஊர்?” என்று கேட்டார்.

“ஆரான்” என்றனர்.

“லாபான் என்பவரை உங்களுக்குத் தெரியுமா?”

“ஆம். லாபானை நன்றாகத் தெரியும். அதோ, அவரது இளைய மகள் ராகேல் ஆடுகளை ஓட்டிக்கொண்டு வந்துகொண்டிருக்

## மனன வசனம்

**எவ்விதத்தினாலேயும், எங்களைத் தேவ ஊழியக்காரராக விளங்கப்பண்ணுகிறோம்.**

**2கொரிந்தியர் 6:3.**

கிறாளே'' என்று யாக்கோபிடம் கூறினார்கள்.

தன் மாமா லாபானின் மகள் வருகிறாள் என யாக்கோபு கேட்ட மாத்திரத்தில், அவரது உள்ளம் சந்தோஷத்தால் பொங்கியது. தான் இப்போது அனாதையாக இல்லையென்கிற திருப்தி மனதில் வந்தது. முகம் மலர்ந்தார்.

ராகேலின் ஆடுகளுக்குத் தண்ணீர்காட்ட யாக்கோபு விரும்பினார். எனவே, வேகமாக எழுந்து கிணற்றை மூடியிருந்த கல்லைப் புரட்டப் போனார். ''இருட்டும்போது தானே ஆடுகளை நாம் தொழுவத்தில்சேர்ப்போம். ஆடுகளுக்குத் தண்ணீர் காட்டி இன்னும் மேய விடலாமே'' என்றார்.

''இல்லை; அப்படிச் செய்யக் கூடாது. இன்னும் எல்லா மந்தைகளும் வந்து சேர்ந்த பின்னர் தான் தண்ணீர் காட்ட வேண்டும்; அப்போது தான் கல்லைப் புரட்டி ஆடுகளுக்குத் தண்ணீர் காட்டுவார்கள்; இதுதான் இந்த ஊரின் வழக்கம்'' என்றார்கள்.

அவர்கள் பேசிக்கொண்டிருக்கும்போதே யாக்கோபு ஆர்வத்துடன் அந்த மனிதர்கள் காட்டிய திசையில் பார்த்தார். ஆடுகளை ஓட்டிக்கொண்டு ராகேல் வந்துகொண்டிருந்தாள்.

யாக்கோபுவால் அமைதியாயிருக்க முடியவில்லை. அந்த ஊர் வழக்கம் வேறாக இருந்தாலும், யாக்கோபு கல்லைப் புரட்டி ராகேலின் ஆடுகளுக்குத் தண்ணீர்காட்டினார்.

நீண்ட தூரம் நடந்த களைப்பைப் பொருட்படுத்தாமல் மிகவும் பாசமாக தண்ணீர் இறைத்து, இறைத்துக்கொடுத்து ராகே



## செய்தி

**வீட்டில் கனிவுடன் செயல்படுவதால் பிறருக்கு உதவுவது எப்படி எனக் கற்றுக்கொள்ள முடிகிறது.**

லுக்கு உதவினார். ராகேலின் முகம் மலர்ந்தது. ராகேலின் மலர்ந்த முகத்தைப் பார்த்த யாக்கோபின் உள்ளத்தில் சந்தோஷம் பொங்கியது.

“நான் உன் அத்தை மகன் யாக்கோபு” என்றார். தன் பெற்றோரைப் பிரிந்த வேதனையில் ராகேலிடம் பேசும்போதே அழலானார்.

யாவையும் கேட்டஅவள், ஆனந்தத்தோடு வீட்டிற்கு ஓடினாள். தன் அப்பா லாபானிடம் சொன்னாள். லாபான் ஓடிவந்தான்.

தன் மருமகன் யாக்கோபை கட்டிப்பிடித்து முத்தம் கொடுத்தான். வீட்டுக்கு அழைத்துச் சென்றான்.

ராகேல் எதுவும்கேட்காத போதும், யாக்கோபுஅந்தப் பெரிய கல்லைப்புரட்டி, அவளது ஆடுகளுக்குத் தண்ணீர் கொடுத்து உதவினார்.

செல்லமே, இயேசுவுக்கு நீ எப்படி உதவப் போகிறாய்?

**செய்முறை:**

*பாடத்தை நன்கு படித்து, சரியான பெயர்களைக் கண்டுபிடி. கட்டத்தினுள் உள்ள கோடுகளில் சரியான எழுத்துக்களை எழுதி, விடையைக் கண்டுபிடி.*

## புதிர் 1

